*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 514- 517, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# பழுவேட்டரையர் கல்வெட்டுகள் காட்டும் சமுதாய நிலை

**முனைவர்.இரா.முத்து**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, எம். வி. முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்*

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாற்றில் கல்வெட்டுக்கள் வாயிலாக இடைக்காலச் சமுதாயத்திலிருந்து பல்வேறு சாதி அமைப்புகள், சாதிகளின் நிலை, சமுதாயத்தில் பெண்கள் பெற்றிருந்த மதிப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. பழுவேட்டரையர்கள் சோழர் காலத்துடன் இணைந்திருந்ததால் அவர்களுடைய சமுதாயம் எவ்வண்ணம் இருந்தது என்பது பற்றி பழுவூர் கல்வெட்டுகள் பல செய்திகளை தருகின்றன.

## முன்னுரை

வரலாற்றில் கல்வெட்டுக்கள் வாயிலாக இடைக்காலச் சமுதாயத்திலிருந்து பல்வேறு சாதி அமைப்புகள், சாதிகளின் நிலை, சமுதாயத்தில் பெண்கள் பெற்றிருந்த மதிப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. பழுவேட்டரையர்கள் சோழர் காலத்துடன் இணைந்திருந்ததால் அவர்களுடைய சமுதாயம் எவ்வண்ணம் இருந்தது என்பது பற்றி பழுவூர் கல்வெட்டுகள் பல செய்திகளை தருகின்றன.

## சமுதாய அமைப்பு

பழுவூர்க் கல்வெட்டுகளில் அந்தணர்களே அதிக அளவில் இடம்பெற்றுள்ளனர். மேலும் கொடையாளிகளாகவும், கொடையளிக்கப்பட்ட நிலப்பகுதிகளை அடுத்திருந்த நிலங்களின் உரிமையாளர்களகவும், சபையமைப்பின் நிலங்களின் ஆட்சியாளர்களாகவும், கோயில் நிர்வாகம் சார்ந்த அலுவலர்களாகவும், அரசு அலுவலர்களாகவும், சமுதாயத்தின் பல நிலைகள் சார்ந்து அவர்கள் வாழ்ந்திருந்தனர் எனத் தெரிகின்றது. மேலும் சாவாந்தி, பாலாசிரியர் என்னும் இருபிரிவுகள் சேர்ந்த அந்தணர்களே பழுவூர்க் கல்வெட்டுகளில் பெரும்பான்மையாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு பிரிவினருமே ஆலந்துறையார் மற்றும் மறவனீசுவரம் கல்வெட்டுகளில்தான் இடம் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் இக்கோயில்கள் இருந்த பகுதி பிரம்மதேயமாக இருந்ததே இதற்குக் காரணமாகும்.

புள்ளமங்கலம், சாத்தமங்கலம், தொழூர், சிறுபழுவூர், வாணவிசாதிரநல்லூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த பாலாசிரியர்களாக இலக்குவணன் இரவி, அக்கிரன், சடையன், கீரன், நக்கன் நாராயணன், மூவாயிரன் குமாரன் உமாபதி, கவிசியன் குமரன் மூவாயிரன், ரவி இரவி, கீரன் இலக்குவணன், நாரயணன்

ஒலோகநாதன், குமரன் இரவி, கண்டன் ஸ்ரீகுவாலந்கோனை ஸ்ரீகண்டன் அய்யாறன், லோகவணகேதி, இரவி சோழன், கௌசிகன் நமச்சிவாய திருச்சிற்றம்பலமுடையான், நமசிவாயர், சுத்தமல்லன் விநாயகப்பட்டன், மூவாயிரன் அய்யாறன், நாராயணன் திருவாய்க்குலமுடையான், மூவாராயன் நக்கன், கீரன் கேசுவன், இராமன், கீரன் மகாதேவன் அகியோர் குறிக்கப்படுகின்றனர்.

அந்தணர்களையடுத்த நிலையில், அரச மரபினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டுகளில் கொடையாளிகளாகவும், நிர்வாகிகளாகவும் இடம்பெறுகின்றனர். மேலும் சங்கரபாடியார், வளஞ்சியார் போன்ற வணிக அமைப்புகள் பொது நிலையிலும், சில வணிகர்கள் குறிப்பாகவும் இக்கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றனர். அரண்மனைப் பணிப்பெண்கள், படைவீரர்கள், கோயில் அலுவலர்கள், ஆடற்பெண்கள், பொதுமக்கள் ஆகியோர் இதற்கடுத்த நிலையினராக அமைகின்றனர். அடுத்தபடியாக மன்றாடிகள், வேட்டகோவர்கள், உழுகுடிகள், குறறேவல் செய்தோர் போன்ற தொழிலாளர்களையும்கூட பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டுகளில் பார்க்கமுடிகின்றது.

**மக்கட் பெயர்கள்**

பழுவூர் சமுதாய பல்வேறு பெயர்ளைக் கொண்டிருந்தனர் என பழுவேட்டரையர் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது. அவர்களுள் சிலர் அரசர் பெயரைத் தம் பெயரின் முதற்பகுதியாகக் கொண்டிருந்தனர். உதாரணமாக கண்டன் செட்டி, கண்டன் தேவடி, கண்டபிராட்டி, கண்டன் நெரியாள், நக்கன் ஸ்ரீ கண்டன், கண்டன் ஸ்ரீகுவாலந்கோனை, ஸ்ரீகண்டன் ஐயாறன் ஆகியோர் கண்டன் என்ற அரசர் பெயரை இணைத்துக்கொண்டிருந்தனர்.

**பெண்கள் நிலை**

பெண்கள் உயரிய இடம் பெற்றிருந்ததாக பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அதில் முக்கோக்கிழானடிகள், பஞ்சவன்மாதேவி, அரிஞ்சிகை மாதவடிகள், நாட்டின சேயாள் நங்கை, அழியாநிலை, காமன் கோவியார் என்பன பழுவூர் கோயில்களுக்குக் கொடையளித்த சில அரச மகளிர் பெயர்களாகும். இவர்களுள் பஞ்சவன்மாதேவி முதலாம் இராசராசரின் தேவியாவார் என்ற செய்தியினையும் கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது. இவர்கள் தவிர வீராணன் ஒற்றியூர், தேவடி புகழறை, குமிழி காணவல்லி, சங்கரன் வடுகி, கண்டராதித்தி, அறிஞ்சிகை மாதேவடிகள், நந்திங்கடத்தி, காடன் பொனடனசை, மோகன ஆண்டதிரு, மொகுலியள், ஊரன்சுவரி ஆகிய பெண்களும் பழுவூர்க் கல்வெட்டுகளில் கொடையாளிகளாகக் காட்டியிருகின்றனர். அக்காலச் சொத்துரிமை பற்றித் தெளிவான நிலைகளையும், தனக்குரிய சொத்துக்களை ஒரு பெண், தன் விருப்பம்போல் கையாளப் பெற்றிருந்த உரிமைச் சூழல்களையும் இக்கல்வெட்டுச் செய்தியின் மூலம் உணரலாம்.

மேலும் திருக்கோயில் பணிகளில் தங்களை இணைத்துக் கொண்ட பெண்களாக அக்கார நங்கை, கிடந்த பெருமாள், பெரிய அரங்கபிரான், குமரக்கன், மானதிரி, கண்டபிராட்டி, பெற்றமை, வீராநானி, பஞ்சவன்மாதேவி, ஐயாற்றிடிகள் ஆகியோர் பெயர்களைக் கல்வெட்டுகள் தருகின்றான. இப்பெண்கள் தங்கள் பெயருக்கு முன் நக்கன் என்ற பொதுப் பெயரை கொண்டிருந்தனர். நக்கன் என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லாகும். அப்பரும் சம்பந்தரும் திருமுறைகளில் இறைவனைக் குறிக்க இச்சொல்லப் பெருவிருப்போடு பயன்படுத்தியுள்ளனர் என்றும் அறியமுடிகிறது. இறைக்கோயில்களுக்குத் தங்களை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டவர்களும் இறைக்கோயில் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களும் இந்நக்கன் என்ற பொதுப்பெயரைக் கொண்டிருந்தனர். ஆண், பெண் இருபாலரும் இப்பெயரோடு திகழ்வதைப் பல சோழர் காலக் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் பழுவேட்டரையார் கல்வெட்டுகளும் இதனை உறுதிபடுத்துகின்றது.

**கலைகள்**

அன்றையநாள் கோயில்கள் இறைவழிபாட்டுத் தலங்களாக விளங்கியதோடு கலை வளர்க்கும் நிலையங்களாகவும் திகழ்ந்தன. இசைக்கலைஞர்கள், ஆடற்கலைஞர்கள், சொற்பொழிவாளர்கள் எனப் பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள் கோயிகளோடு இணைந்து தமிழ்க்கலைகளை வளர்ந்ததை சங்க காலத்திலிருந்தே காணமுடிகிறது. கூத்திகள் என்றழைக்கப்பட்ட இவர்கள் தளிப்பரிவாரத்தின் ஓரங்களாக விளங்கினர். மேலும் இவர்களை, இத்தளிக் கூத்திகள் என்று பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

முதலாம் இராசராசரின் இராஜராஜுசுவரத்துக் கல்வெட்டொன்று அவர் காலத்தே சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து இராஜராஜுசுவத்திற்கு வரவழைக்கப்பட்ட நானூறு அடற்பெண்களிப் பற்றிய தகவலை நமக்குத் தருகின்றாது. இப்பெண்கள் கோயிற்சார்ந்த மற்றும் ஊரகத்த தளிச்சேரிகளிலிருந்து வரழக்கப்பட்டவர்ரவர். ஆடல் மகளீல் குடியிருப்புகளே அந்நாளில் தளிச்சேரிகள் என்றழைக்கப்பட்டன. தளி

கோயிலையும், சேரி குடியிருப்பையும் குறிப்பதாக கல்வெட்டுகள் வழி உணரமுடிகிறாது. பழுவூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆடற் பெண்களுள் சிலர், தளித்தேவனார் மகள்களாகவும் குறிக்கப்படுகின்றனர். இத்தளிப்பெண்கள் கோயில் வழிபாடுகளின்போதும், திருவிழாக்களின்போதும் இறைத்திருமேனிகள் உலாவரும் போதும் ஆடல் நிகழ்த்தும் பொறுப்போற்றிறுந்தனர். இவர்கள் செல்வச் செழிப்புடன் விளங்கியமைக்குப் பழுவூர்க் கல்வெட்டுகளும், சமகாலச் சோழர் கல்வெட்டுகளும் சான்றாக இருக்கின்றன.

கோயில்களில் பல திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. இத்திருவிழாக்களில் தேரோட்டங்கள் நிகழ்ந்தமைக்குத் தேர்போகும் வழியைச் சுட்டும் கல்வெட்டு ஒன்று சான்றகிறாது. மேலும் விழா வீதியென்றே ஒரு தெரு இருந்ததை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். இக்கோயில் திருவிழாக்களில் கூத்துகள் நிகழ்த்தப்பட்டன. ஆடற்கலிஞர்க்கு அக்காலச் சமுதாயம் அளித்திருந்த மதிப்பினை பழுவேட்டரையர் கல்வெட்டுகள் மூலம் உணர முடிகின்றது.

**குற்றங்களும் தண்டனைகளும்**

சமுதாயக் கட்டமைப்பில் கோயில்களுக்குக் கொடையளித்தல், கலிஞர்குச் சிறாப்புச் செய்தல் போன்ற நற்செயல்களை ஒருபுறம் பார்க்க முடிந்தாலும் ஆங்காங்கே குற்றங்களும் சச்சரவுகளும் நிகழ்ந்ததையும் சில கல்வெட்டுகளல் அறியமுடிகிறாது. பழுவூர்க் கோயில்களைச் சேர்ந்த ஐந்து கல்வெட்டுகள் ஆறு குற்றாங்களை எடுத்துரைகின்றன. இவற்றுள் நான்கு, சச்சரவின்போது நிகழ்ந்த கொலைகள் ஆகும், இக்கொலைகளைச் செய்தவர்கள் தாங்களாகவோ அல்லது அரசர் உத்தரவுப்படியோ பழுவூர்க் கோயில்களில் இறைத்திருமுன் நந்தாவிளக்குகள் எரிப்பதற்குக் கொடையளித்தார்.

முதுகுடி வாழ் வீரகலி அரங்கனும், மாதேவடிகளும் சச்சரவிட்டுக் கொண்டபோது, வீரகலி அரங்கன் மாண்டு போனார். வீரகலி அரங்கனின் நினைவாகப் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகன் சிறுபழுவூர்த் திருவாலந்துறாஇயார் கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்கத் தொண்ணூறு ஆடுகள் கொடையாக அளித்ததை கல்வெட்டால் அறியமுடிகிறது.

முதலாம் இராசரசரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பழுவேட்டரையர் கண்டன் மறாவனின் ஆட்சிக்காலத்தில் நடந்த குற்றத்தையும் அதற்குத் தரப்பட்ட தண்டனையும் தெளிவாக எடுத்துரைஇகிராது. அதன் பிராகு கண்டன் மறவனின் இளைய இரணமுகராமன் படையைச் சேர்ந்த கக்கோளன் பலதேவன் வயிரியும், குன்றக் கூற்றாத்து மல்லூரைச் சேர்ந்த வெள்ளானன் கிழவன் நம்பனும் இருவிய கத்திகளுடன் சண்டையிட்டுக்கொள்ள, பலதேவன் வயிரி கொலையுண்டார். அதற்குத் தண்டனையாக சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் இறைத்திருமுன் நந்தாவிளக்கொன்று அமைக்குமாறு கிழான் நம்பனுக்குப் பழுவேட்டரையர் கண்டன் மறவன் ஆணையிட்டார். கிழவன் நம்பன் அவ்வுத்தரவுப்படி இக்கோயிலில் விளக்கெரிக்க வாய்ப்பாகத் தோண்ணூறு சாவா மூவாப் பேராடுகளைக் கொடையளித்தார் என்ற செய்தியையும் பழுவேட்டரையர் கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.

முதலாம் இராசராசரின் பன்னிரெண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பழுவேட்டரையரின் கக் கொளனான குஞ்சிரமல்லன் முருக்கனைத் தென்பாளன்பாடி அய்யாறன்கானன் உயிரிழக்கச் செய்த நிகழ்வை வெளிப்படுத்துகிறது. இக்குற்றத்திற்கு தண்டனையாகச் சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் குஞ்சிரமல்லன் நினைவாக நந்தாவிளக்கொன்று எரிக அய்யாறன் வகைச்ய்தார் என கல்வெட்டுக்கள் கூறுகின்றாது. இம்மூன்றும் கல்வெட்டுச் செய்திகளையும் கூர்ந்து ஆராய்கையில் உயிரிழப்புச் செய்தவர்க்குத் திருக்கோயிலில் இறைவன் திருமுன்னில் நந்தாவிளக்கெரிக்க வகை செய்வதே பழுவூர் மண்டலத்தில் தண்டனையாகத் தரப்பட்டதை உணரமுடிகிறாது. இம்மூன்று குற்றங்களில் இரண்டில் குற்றம் செய்தவர் விளக்கெரித்திருக்கிறார். ஒன்றில் குற்றமிழைத் தவரின் சார்பில் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகனே விளக்கெரித்தைக் காணமுடிகிறது. குற்றவாளி கிடைக்காமையால் இறந்தவர் சார்பாக அன்னாரது ஆன்ம சாந்திக்காக அரசே விளக்கெரித்திருக்ககூடும் என்றும் அறிய முடிகிறது.

தென்வாயில் ஸ்ரீகோயில் தாங்குளத்தில் காணப்படும் முதலாம் இராசேந்திரரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, குற்றமொன்றையும், தற்செயலாக நடந்த விபத்து ஒன்றையும் எடுத்துரைக்கிறாது. இவ்வாறு பழுவூர் பழுவேட்டரையர் கல்வெட்டுகளில் சமுதாயத்தில் இருந்த பிரிவுகள் பற்றியும், கலை வளர்ச்சி மற்றும் குற்றங்களும் அதற்கான தண்டனைகள் பற்றியும் நன்கு அறியமுடிகிறது. பழுவேட்டரையர்களின் கல்வெட்டுக்கள் அக்கால மக்களின் சமுதாயநிலை குறித்து அறிந்துகொள்ள முதன்நிலை ஆதாரமாக விளங்குகிறது.

**துணை நூல்கள்**

1. அப்துல் மஜீத். அ., கீழ்ப்பழுவூர்க் கல்வெட்டுகள் வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை - 1992.
2. பாலம்பாள். வெ., பழுவேட்டரையர்கள், சங் பதிப்பகம், அலகாபாத் - 1978.
3. பாலசுப்பிரமணியம். எஸ்.ஆர்., முற்காலச் சோழர் கலையும், சிற்பமும், பாரி பதிப்பகம், சென்னை - 1966.
4. பஞ்சநாதன் பிள்ளை. ஆர்., திருப்பழுவூர் கோயில் வரலாறு, எஸ்.எம். பதிப்பகம், திருச்சி - 1989.
5. குருசாமி தேசிகர். வி.சா., திருப்பழுவூர் திருமழபாடிப் பதிகங்கள், தருமபுர ஆதின வெளியீடு - 1977.
6. கோவிந்தராசன். சி., கல்வெட்டுச் கலைச்சொல் அகராதி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 1987.
7. கலைக்கோவன். இரா., பழுவூர்ப் புதையல்கள், இலக்கிய பீடம் பதிப்பகம், சென்னை - 2002.
8. Annual Reports on Indian Epigraphy, 1895 to 1925.
9. Epigraphica Indica, Vol. XV.
10. Inscriptions of the Madras Presidency, Vol. II and III.
11. South Indian Inscriptions, Vols. I, II, IV.


*****